பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 23 | செவ்வாய்க்கிழமை | 27.05.2025 | அதிர்வு 296

## வருட இறுதிக்குள் இலங்கை மீண்டும் வீழ்ச்சியடையுமாம்



### மீட்டெடுக்க எதிரணிக் கூட்டணி தயாராம் என்கின்றது ஐ.தே.க.

“இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசின் வேலைத்திட்டங்கள் ஆரோக்கியமானதாக 06

# தொகுதி அமைப்பாளர்களே இராஜினாமா செய்யும் நிலையில் ஜனாதிபதியாகப் பதவியேற்கக் கனவு காண்கின்றார் சஜித்!



## போட்டுத் தாக்குகின்றது அநுர அரசு

“ஒரு கட்சியின் வளர்ச்சியில் தொகுதி அமைப்பாளர்கள் பிரதான பங்கு வகிக்கின்றார்கள். அவர்களே மக்களுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கின்றார்கள். இன்று அவர்களே பதவி விலகும் நிலையில் எதிர்வரும் டிசம்பரில் குறுக்கு வழியில் ஜனாதிபதியாகப் பதவியேற்கக் கனவு காண்கின்றார் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ.”

– இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“ஐக்கிய மக்கள் சக்தி கட்சி தோற்றம் பெற்று இதுவரை எந்தவொரு 06



# வடக்கு மக்களை தவறாக வழிநடத்தும் தமிழ் அரசியல்வாதிகள்

## காணிகளை அரசு அபகரிக்காது என்று அமைச்சர் வாக்குறுதி

“வடக்கு மக்களின் சொந்தக் காணிகளை அவர்களுக்கு உரித்துடன் வழங்கவே அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால், வர்த்தமானி அறிவித்தலைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ள தமிழ் அரசியல்வாதிகள் சிலர், மக்களையும் தவறாக வழிநடத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.”

- இவ்வாறு காணி அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்தார். 06

# தொகுதி அமைப்பாளர்களின் விலகலால் ஐக்கிய மக்கள் சக்திக்குப் பாதிப்பு இல்லை

## இப்படிக் கட்சியின் பொதுச்செயலாளர் கூறுகின்றார்

“ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு நாடு முழுவதிலும் தொகுதி அமைப்பாளர்கள் உள்ளனர். அவர்களில் ஒருசிலரின் பதவி விலகலால் கட்சிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்த போனஸ் ஆசனங்களைப் பகிர்வதில் ஏற்பட்ட மனவிரக்தியில் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களில் ஒருசிலர் பதவி விலகியுள்ளனர். இந்தப் பிரச்சினை ஏனைய கட்சிகளிலும் ஏற்படும். எனவே, ஒருசிலரின் பதவி விலகலால் கட்சிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. இந்தப் 06






உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. தேர்தல் முடிவுகளும் வந்துவிட்டன. ஆனால் ‘கிளைமாக்ஸ்’ காட்சி இனித்தான்.

எந்தச் சபையை, எந்தத் தரப்பு கைப்பற்ற போகின்றது, எப்படி மற்றத் தரப்புக்குக் குழி பறிக்கப் போகின்றது என்ற சர்ச்சை சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. அடுத்த ஒரு வாரம் திருவிழா தான்.

அதுவும் தமிழ் பகுதியில் சுவாரஸ்யம் களைகட்ட தொடங்கியுள்ளது. பல இடங்களிலும் தமிழரசு கட்சி அதிக ஆசனங்களை வென்றுள்ள போதிலும், அது தனித்துவமாக போதிய பெரும்பான்மையைப் பெறாத நிலையில், குறுக்கும் மறுக்குமாகப் பதவிக்கான ஓட்டங்கள் தாராளமாக இடம் பெறுகின்றன.

தமிழரசு கட்சி பெரும்பாலான சபைகளில் அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில், அதற்குத் தேவையான எஞ்சிய ஆசனங்களை வழங்குவதற்கு நிபந்தனைகள், பேரம் பேசல்கள், கால் வாரல் அச்சுறுத்தல்கள், 06



# இயலாமையுடையவர்களின் இறுதி ஆயுதம் அச்சுறுத்தலே!

## அநுர அரசைச் சாடும் சஜித் அணி

“இயலாமையுடையவர்களின் இறுதி ஆயுதம் அச்சுறுத்தலாக இருக்கலாம். ஆனால், அதனைக் கொண்டு ஜனநாயகத்தை அழிக்க முடியாது. மக்களால் எதிர்க்கட்சிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளில் நாம் ஆட்சியமைத்து மக்களுக்காகச் சேவையாற்றுவோம்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நிரோஷன் பாதுக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

”ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை இன்றியே வெற்றி பெற்றார். அதேபோன்று பெரும்பான்மை இன்றி உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியமைக்க முடியும் என்று எண்ணுகின்றார். அது தவறாகும். அதனைப் புரிந்து கொள்வதற்கு அவர் ஜூன் 2ஆம் திகதி வரை காத்திருக்க வேண்டும்.

2ஆம் திகதி வாக்கெடுப்பின் பின்னரே ஜனாதிபதி அநுரகுமார முன்னிலையில் இருக்கின்றாரா அல்லது பின்தள்ளப்பட்டுள்ளாரா என்பது தெரியவரும். உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் ஜனாதிபதி அநுரவிடமிருந்து கிடைப்பதில்லை. இங்கு கிடைக்கப் பெறும் நேரடி வருமானத்தைக் கொண்டு நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும். எனவே, அரசு நிதி ஒதுக்கும் வரை காத்திருக்க வேண்டிய தேவை ஏற்படாது.

நிறைவேற்று அதிகாரத்துக்குச் சவால் விடுக்கும் வகையிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ இந்தத் தேர்தல் சட்டத்தை உருவாக்கினார். நிறைவேற்று அதிகாரம் இல்லாவிட்டாலும் கிராமத்துக்கு அதிகாரம் காணப்பட வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். எனவே, உள்ளூராட்சி சபைகளையும் பெலவத்த அலுவலகத்தில் கட்டுப்பாட்டில் எடுக்க நினைத்தால் அதற்கு எதிர்க்கட்சிகள் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

இயலாமையுடையவர்களின் இறுதி ஆயுதம் அச்சுறுத்தலாக இருக்கலாம். ஆனால், அதனைக் கொண்டு ஜனநாயகத்தை அழிக்க முடியாது. கட்சித் தலைமையகத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய நாம் செயற்படுவோம். மக்களால் எதிர்க்கட்சிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளில் நாம் ஆட்சியமைத்து மக்களுக்காகச் சேவையாற்றுவோம்.” – என்றார்.

# உயர்தர பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான கால நீடிப்பு




2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மேற்படி விண்ணப்பங்களை மே 30ஆம் திகதி வரைசமர்ப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.





# நியூசிலாந்து பிரதிப் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பு

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து பிரதிப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான வின்சென்ட் பீட்டர்ஸுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பெற்ற குறிப்பிடத்தக்க வெற்றிகளுக்காக ஜனாதிபதி அநுர குமாரதிஸாநாயக்க மற்றும் புதிய அரசாங்கத்திற்கு நியூசிலாந்து அரசாங்கம் மற்றும் மக்களின் வாழ்த்துகளைத் தெரிவித்த பிரதிப் பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை வலுப்படுத்துவதே தனது அரசாங்கத்தின் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் கீழ் இலங்கையில் நடைபெற்று வரும் சாதகமான முன்னேற்றங்கள் குறித்து மகிழ்ச்சியைத் தெரிவித்த நியூசிலாந்து பிரதிப் பிரதமர், அரசியல் ஸ்திரத்தன்மை, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் சமூக மேம்பாட்டிற்கான புதிய அரசாங்கத்தின் முயற்சிகளைப் பாராட்டினார்.

நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமைத்துவத்தை பாராட்டிய பிரதிப் பிரதமர், இந்த வேலைத்திட்டம் இலங்கைக்கு நிலையான அபிவிருத்தியை அடைய உதவும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தச் சூழலில், எதிர்காலத்தில் இலங்கைக்கு வழங்கப்படும் நிதி உதவியை மேலும் விரிவுபடுத்த நியூசிலாந்து அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் பிரதிப் பிரதமர் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நியூசிலாந்து பிரதிப் பிரதமர் வின்சென்ட் பீட்டர்ஸின் விஜயம் இலங்கை – நியூசிலாந்து உறவுகளில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும் என தெரிவித்தார்.

மக்களிடையேநீண்டகாலமாகநிலவும் பிளவுகள் நீண்டகால மோதல்களுக்கு வழிவகுத்துள்ளன என்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்கியதுடன், நல்லிணக்கச் செயல்பாட்டின் முக்கிய தூணாக தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கு தனது அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

விவசாயம், கல்வி மற்றும் சுற்றுலா ஆகிய துறைகள் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் பரஸ்பர ஆர்வமுள்ள இந்தத் துறைகளின் முன்னேற்றத்திற்காக நெருக்கமாக செயற்படவும் இணக்கம் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே மற்றும் நியூசிலாந்து வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவும் கலந்து கொண்டனர்.













# சர்வதேச லயன்ஸ் கழக தலைவர் ஜனாதிபதி அநுரவுடன் சந்திப்பு

இலங்கையிலுள்ள சிறுவர் மற்றும் இளைஞர் சமூகத்தினரின் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மற்றும் அவர்களின் நலன்களுக்கு தேவையான ஆதரவை வழங்குவதாக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் தலைவர் பெப்ரிசியோ ஒலிவேரா தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனை கூறினார்.

இலங்கையில் தற்போது தமது கழகத்தால் முன்னெடுக்கப்படும் உணவு பாதுகாப்புத் திட்டங்கள், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத் திட்டங்கள் மற்றும் கல்வித் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச லயன்ஸ் கழகத்தால் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்களுக்கு ஜனாதிபதி பாராட்டு தெரிவித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.











# கடற்பிராந்தியங்களுக்கு செல்வதை தவிர்க்கவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தல்

நாட்டின் சில கடற்பிராந்தியங்களுக்கு மறு அறிவித்தல் வரை பயணம் செய்வதை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சிலாபத்திலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலும் மாத்தறை முதல் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோர பகுதிகள் கொந்தளிப்பாகக் காணப்படும் என திணைக்களம் தெரிவித்தது.

மேற்படி கடற்பிராந்தியங்களில் அவ்வப்போது காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 60 கிலோ மீற்றர் முதல் 70 கிலோ மீற்றர் வரை அதிகரித்து காணப்படலாம் என திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் ஏனைய கடற்பிராந்தியங்களிலும் காற்றின் வேகம் அதிகரிக்கக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 75 மில்லி மீற்றர் வரையான பலத்த மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் நுவரெலியா, கண்டி, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

# கட்சித் தலைவரின் தீர்ப்பினை விமர்சிக்க முடியாது: காவிந்த



கட்சித் தலைவர், நடுவரைப் போன்றவர் எனவும், அவரது தீர்ப்பினை விமர்சிக்க முடியாது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்கள் பதவி விலகுகின்றமை தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கிரிக்கெட் போட்டியில் நடுவரையும், அவரது தீர்ப்பையும் விமர்சிக்க முடியாது. அவரது தீர்ப்பே இறுதியானது அதில் தர்க்கம் புரிய முடியாது.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரையில் சஜித் பிரேமதாஸ என்ற ஒரு நடுவரே உள்ளார். இரண்டாம், மூன்றாம் நடுவர்கள் இல்லை.

அவரது சீடர்களாக அவருடன் இணைந்து எந்தவொரு பிரச்சினைக்கும் முகங்கொடுப்பதற்கு தாங்கள் தயாராக உள்ளோம்.” என்றார்.

# சமையலின்போது தீ பற்றியதால் இளம் குடும்பப்பெண் உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

சமையலில்ஈடுபட்டிருந்தபோதுஅடுப்பு எரியாததால் மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்ட முற்பட்ட இளங்குடும்பப் பெண் ஒருவர் தீயில் எரிந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயர்ந்துள்ளார்.

புலவர்வீதி, நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த கஜன் தனுஷா (வயது 23) என்ற ஒரு வயது குழந்தையின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி மதியம் மேற்படி இளம் தாயாரும் பிள்ளையும் வீட்டில் சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அடுப்பு எரியாததால் அடுப்பை மூட்ட மண்ணெண்ணெய் ஊற்றிய போது மேற்படி பெண்ணின் உடையிலும் மண்ணெண்ணெய் சிந்தியதனால் தீக்காயம் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிசார் நெறிப்படுத்தினர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எச்சரிக்கைகள் களை கட்டும் சூழல் தென்படுகிறது. அதேசமயம், எதிர்கால நல்லிணைவுகளுக்கான சமிக்ஞையாக தமிழரசே சில இடங்களையும் பதவிகளையும் தானாகத் தாரைவார்த்து அரவணைத்தால் என்ன என்ற அன்புகலந்த அழுத்தங்களும் தமிழரசுக்கு வராமல் இல்லை.

வடக்கைப் பொறுத்தவரை தமிழரசு கட்சிக்கும் தமிழ்த் தேசிய முன்னணிக்கும் இடையில் உள்ள இழுபறியை வைத்து மூன்றாம் தரப்பு அதிக இடங்களை அல்லது பங்குகளை கோருவதான – அழுத்தம் தருவதான – ஒரு கருத்து நிலைப்பாடு தமிழரசுக்குள் உணரப்படுவதாகத் தெரிகிறது.

எனினும் இப்போது இடம்பெறும் பிரதேச சபை நிர்வாகங்களுக்கான போட்டாபோட்டிக்கு அப்பால், இனி வரும் மாகாண சபை தேர்தலுக்கான ஒன்றிணைவுகள் குறித்தும் இப்போதே சிந்திக்க வேண்டிய அரசியல் இக்கட்டும் – கட்டாயமும் – இருக்கின்றது.

இந்தச் சூழலில் தமிழரசின் விட்டுக் கொடுப்பினால், அக்கட்சியின் தலைமையில் பிற கட்சிகள் வலிமையாக ஒன்றிணையும் சாத்திய கூறுகளும் அரும்பக்கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன.

அதற்கு இடம் அளிக்காமல், தமிழரசோடு தாமே நேரடியாக இணங்கி, உடன்பாடு கண்டு போகும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கான தந்திரோபாயத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஆராய்வதாகத் தெரிகின்றது.

இந்தப் பின்புலத்தில் தமிழரசு மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் சிரேஷ்ட தலைவர்கள் நேரடியாக தங்களுக்குள் சந்தித்து பேசி இணக்கம் காண்பதற்கான வாய்ப்புகளும் நெருங்கிவருகின்றன என விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. சந்திப்புகள் விரைவில் நிகழலாம்.

உள்ளூராட்சி சபை நிர்வாகங்களைத் தேர்வு செய்வதற்காக ஏற்படக்கூடிய இணக்கங்கள், அடுத்து வரும் மாகாண சபைத் தேர்தலில் கட்சிகளின் கூட்டுச்செயல்பாட்டுக்கும் ஒன்றிணைவுக்கும் அச்சாரமாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

எது, எப்படி என்றாலும் அடுத்த ஒரு வாரத்துக்குள் தமிழர் தரப்பிம் அரசியல் கட்சிகள் இடையே ஏற்படக்கூடிய இணக்கமும் பிணக்கும் அடுத்து வரப்போகின்ற மாகாண சபை தேர்தலில் காட்டமாக எதிரொலிக்கும் என உறுதியுடன் நம்பலாம்.

## வடக்கு மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“வடக்கில் மக்களின் காணிகளை அபகரிக்கும் நோக்கம் அரசுக்குக் கிடையாது. கைவிடப்பட்டிருக்கும் அவர்களின் சொந்தக் காணிகளை அவர்களுக்கு உரித்துடன் வழங்கவே அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமையவே வர்த்தமானியை அரசு வெளியிட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ள தமிழ் அரசியல்வாதிகள் சிலர், மக்களையும் தவறாக வழிநடத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

தமிழ் மக்களின் சொந்தக் காணிகளை ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்று பொய்யான கோஷத்தை முன்வைத்து வடக்கு மக்களை வீதியில் களமிறக்கி அரசுக்கு எதிராகப் போராட வைக்கத் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் எத்தனிக்கின்றனர்.

எனவே, வடக்கு மக்கள் உண்மையை நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும். போலி வேடம் போட்டு உங்களைத் தவறாக வழிநடத்தும் தமிழ் அரசியல்வாதிகளை நம்ப வேண்டாம் என்று வடக்கு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றார்.

## வருட இறுதிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இல்லை. இந்நிலை தொடர்ந்தால் வருட இறுதிக்குள் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நாட்டை மீட்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.”

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

“நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் பெறுபேறுகளைப் பார்க்கும்போது மக்களுக்கு அரசின் மீது இருந்த நம்பிக்கை குறைவடைந்துள்ளதைத் தெளிவாகக் காட்டுகின்றது. மக்கள் செல்வாக்கை இழந்து வருகின்றதைத் தற்போது அரசும் உணர்ந்துள்ளது.

தேர்தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்கள் அனைவரையும் திருடர்கள் என்றே தேசிய மக்கள் சக்தி தெரிவித்து வந்தது. அவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் எனவும் பிரசாரம் செய்து வந்தார்கள்.

ஆனால், தேர்தலில் அரசு எதிர்பார்த்த வெற்றியை மக்கள் வழங்கவில்லை. 180 இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளில் அரசுக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆட்சிக்கு வந்த அரசு ஒன்று குறுகிய காலத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்தளவு பின்னடைவைச் சந்தித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். அரசின் இயலாமையை மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர்.

அதனால் அரசுக்குப் பெரும்பான்மை இல்லாத உள்ளூராட்சி சபைகளில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் தலைமையில் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

கலந்துரையாடல்கள் சாதகமாகவே அமைந்துள்ளன. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு 4 ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். அதனால் அதிகமான சபைகளில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் சென்ற வழியைத் தவிர வேறு வழியில்லை. இந்த வழிக்கு மாற்றமாகப் பயணித்தால் நாடு வீழ்ச்சியடையும் என்றே தெரிவித்திருந்தோம்.

தற்போது அரசு செல்லும் பயணத்தைப் பார்க்கும்போது இந்த வருட இறுதிக்குள் நாடு வீழ்ச்சியடையும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்கு ஒன்றிணைந்துள்ள எதிர்க்கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீட்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.” – என்றார்.

## தொகுதி அமைப்பாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தேர்தலிலும் வெற்றியடையவில்லை. அந்தக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகிக்கத் தகுதி இல்லாத அவர், ஜனாதிபதியாக வருவதற்கு முயற்சிக்கின்றமை வேடிக்கையானது.

தேசிய மக்கள் சக்தி அரசை விமர்சிக்கின்றமைதான் சஜித் பிரேமதாஸவின் நாளாந்த வேலையாக இருக்கின்றது. எமது கட்சியில் குறைகளைக் கண்டுபிடிப்பதே நிறுத்திவிட்டு தமது கட்சியில் இருக்கும் ஓட்டைகளை அடைப்பதற்கு அவர் முயற்சிக்க வேண்டும்.” – என்றார்.

## தொகுதி அமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிரச்சினைக்குக் கட்சியின் தலைமை தீர்வு காணும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.” – என்றார்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வீழ்ச்சியின் ஆரம்பமா?

மழை விட்டும் தூவானம் விடாததைப் போல பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்ளூராட்சித் தேர்தலை அடுத்து ஏற்பட்ட குழப்பம் தேர்தல் முடிந்த பின்னரும் தீர்ந்த பாடில்லை. உட்கட்சிப் பிணக்கு இன்னும் தீவிரம் அடைந்து முற்றி வருகின்றது.

உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற இடங்களுக்குப் பட்டியல் உறுப்பினர்களை நியமிப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக கட்சியின் தேர்தல் அமைப்பாளர்கள் ஐந்து பேர் நேற்று முன்தினம் மாலை வரை பதவி விலகி உள்ளனர். இந்தப் பதவி விலகல் நெருக்கடி மேலும் தீவிரமடைந்து விரிவடையும் போக்குத் தென்படுகின்றது.

சனிக்கிழமை கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தொடங்கிய அமைப்பாளர் பதவி ராஜினாமா, கட்சிக்குள் ஒரு பரந்த வெளியேற்றமாக விரிவடைந்துள்ளது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலைக்குள் மேலும் ஐந்து தேர்தல் அமைப்பாளர்கள் பதவி விலகியுள்ளனர்.

பண்டாரவளை தொகுதி அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, ஹொரவபொத்தானை தொகுதி அமைப்பாளர் அனுர புத்திக, தம்புள்ளை தொகுதி அமைப்பாளர் வழக்கறிஞர் சம்பக விஜேரத்ன, ரத்தொட்டை தொகுதி அமைப்பாளரும் துணை தேசிய அமைப்பாளருமான ரஞ்சித் அலுவிஹாரே, நுவரெலியா மாவட்ட இணை அமைப்பாளர் அனகிபுர அசோக செபால மற்றும் காலி தொகுதி அமைப்பாளர் பந்துலால் பண்டாரிகொட ஆகியோர் விலகியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் பல மாதங்களாவே உள்கட்சி மோதல்கள் நீடிக்கின்றன எனச் செய்திகள் வெளியாகி வந்த பின்னணியில் உள்ளூராட்சி நியமனங்கள் தொடர்பான சர்ச்சை, இந்தத் தீர்க்கப்படாத பிரச்சினைகளை மேலும் தீவிரமடைய வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. மற்றத் தேர்தல் அமைப்பாளர்களிடையேயும் அதிருப்தி பரவலாக இருப்பதாகவும், வரும் நாள்களில் மேலும் ராஜினாமாக்கள் தொடரக் கூடும் என்றும் கட்சி வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

உள்ளூராட்சித் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட பட்டியல் இடங்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள இழுபறி பல இடங்களில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் பெரும் குழப்பங்களைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருவதாகத் தெரிகிறது. எதிர்பார்க்கும் எல்லோருக்கும் அந்த நியமனங்களை வழங்க முடியாத சூழலில் பிரதேசங்களுக்குப் பொறுப்பான அமைப்பாளர்கள் உள்ளூர் அரசியல் நெருக்குவாரங்களை தாங்க முடியாமல் அந்த அமைப்பாளர் பதவிகளை ராஜினாமாச் செய்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அரசியலுக்குப் பொறுமையும், விடாமுயற்சியும், சந்தர்ப்பத்துக்காக காத்திருப்பதும் தவிர்க்க முடியாதவை. கட்டாயமானவை. ஆனால் எவ்வளவு காலத்துக்கு பொறுத்திருப்பது, மீண்டும் சந்தர்ப்பம் கிடைக்குமா என்ற ஆதங்கத்தில் பலரும் கிளர்ந்து எழுந்து வருகிறார்கள்.

ஆட்சி அதிகாரத்தில் இல்லாத கட்சித் தலைமை இந்த நெருக்கடிகளைஎதிர்கொள்ளஅல்லாடுகின்றது. தேசிய மக்கள் சக்தியை பொறுத்த வரை இது வாழ்வா, சாவா பிரச்சினையாக உருவெடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

தேசிய மக்கள் சக்தியின் வீழ்ச்சிக்கான ஆரம்பமாகவும் இந்தப் போக்கு மாறலாம்.

# ஏறாவூரில் அதிக அயடீன் கலந்த உப்பை விற்றவருக்கு பத்தாயிரம் ரூபா அபதாரம்

## ‘வைற் சோல்ட்’ பெயர் கொண்ட உப்புப் பக்கெட்டுக்குத் தடை

(கனகராசா சரவணன்)

ஏறாவூரில்கடைஒன்றில்விற்பனைக்கு வைக்கப்பட்ட உப்பில் அளவுக்கு அதிகமான அயடீன் கலந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டமையை அடுத்து கடை உரிமையாளரை 10 ஆயிரம் ரூபா அபதாரம் செலுத்துமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

மேற்படி வைற் சோல்ட் இலச்சினையிடப்பட்டு பொதி செய்யப்பட்ட உப்பை நாடு முழுவதும் தடை செய்யும் உத்தரவை விடுத்த நீதிவான் விற்பனக்கு இருக்கும் அந்த உப்புப் பக்கெட்டுகளைக் கைப்பற்றி அழிக்குமாறும் தாயாரிக்கும் இடத்தை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

கடந்த மாதம் ஏறாவூர் பிரதேசத்தில் கடை ஒன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்ட பொதி செய்யப்பட்ட “வைற் சோல்ட்” என்ற இலச்சினை பதித்த உப்பு பக்கெட்டை சித்தாண்டி பொது சுகாதார பரிசோதகர் எஸ்.சிவகாந்தன் கைப்பற்றி அதனை பகுப்பாய்வு திணைக்களத்திற்கு பரிசோதனைக்கு அனுப்பிவைத்தார்.



ஒரு கிலோ உப்பில் 30 கிராம் அயடீன் இருக்க வேண்டும், ஆனால் இந்த உப்பில் 84 கிராம் அயடீன் கலந்துள்ளதாகவும், இது மனித பாவனைக்கு உகந்தது அல்ல எனவுன் பகுப்பாய்வு திணைக்களம் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்தது.

இந்த உப்பு பையில் பெறிக்கப்பட்ட உற்பத்தி செய்யும் இடம் மற்றும் ஏனைய தரவுகள் போலியானவை எனவும், ஏறாவூரில் சட்ட விரோதமாக பொதி செய்யப்பட்டு பல பெயர்கள் கொண்ட இலச்சினையுடன் இது விற்பனை செய்யப்படுவதாகவும் நீதிமன்றிற்கு பொது சுகாதார பரிசோதகர் சுட்டிக் காட்டினர்.

# தலவாக்கலைப் பிரதேச செயலகத்திற்கு பௌதீக வளங்களை வழங்கக் கோரி அலுவலகப் பணியாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்




(க.கிஷாந்தன்)

தலவாக்கலை பிரதேச செயலகத்திற்கு பௌதீக வளங்களை வழங்குமாறு கோரி, அந்த அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் குழு ஒன்று நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

தலவாக்கலையில் உள்ள தலவாக்கலை லிந்துலை நகர சபைக்கு சொந்தமான இரண்டு மாடி கட்டடத்தில் 2020 ஆம் ஆண்டு பிரதேச செயலகம் நிறுவப்பட்டது. மேற்படி பிரதேச செயலகத்தின் கீழ், தலவாக்கலை லிந்துல நகர சபைப் பகுதி, திம்புள்ள கிராம சேவகர் பகுதி மற்றும் கொட்டகலை, அக்கரபத்தனை ஆகிய பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரம் குடியிருப்பாளர்களுக்கு சேவைகள் வழங்கப்படுகின்றன.

இந்தப் போராட்டத்தை தொழிற்சங்கக் கூட்டுக் குழு ஏற்பாடு செய்திருந்தது. அதன் உறுப்பினர் தம்மிக்க முனுசிங்க, இந்தப் பிரதேச செயலகத்தில் சுமார் 150 அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பணிபுரிகின்றனர் எனவும், பிரதேச செயலகத்தில் உள்ள இடம் அதற்குப் போதுமானதாக இல்லை என்றும் கூறினார். அதேபோல், பிரதேச செயலகத்தில் பௌதீக வளங்கள் இல்லாததால், அந்த அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு திறமையான சேவையை வழங்க முடியவில்லை.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் பொறுப்பான அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதிலும், இதுவரை எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை.

எனவே, இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச செயலகத்திற்கு அருகில் இருந்து தொடங்கிய போராட்டம் தலவாக்கலை நகரம் வரை சென்றது. ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியை மறித்ததன் காரணமாக தலவாக்கலை பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் வாய்த்தரக்கம் ஏற்பட்டது.



# திருமலை, குச்சவெளி காணிப் பிரச்சினைகள் தீர்க்க விசேட நடமாடும் சேவை மிகவிரைவில்

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா தகவல்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகப்பிரிவில் நீண்ட காலமாக தீர்கப்படாதிருக்கும் காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கான விசேட நடமாடும் சேவை மிகவிரைவில் நடத்தப்படும் என்று வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சரும்,திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான அருண் ஹேமச்சந்ரா நேற்று திருகோணமலையில் வைத்து கூறினார்.

குச்சவெளிபிரதேசசெயலகப்பிரிவின் குச்சவெளி. கும்புறுபிட்டி, நிலாவெளி, இறக்கக்கண்டி, திரியாய்,புல்மோட்டை மற்றும் தென்னைமரவாடி பிரதேச விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பிரதி அமைச்சரை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து சந்தித்து தமது காணிப்பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடிமையை அடுத்தே மேற்படி முடிவை பிரதி அமைச்சர் அறிவித்தார்.

மிக நீண்டகாலமாக பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த, அவர்களுக்கு உரித்தான வயல்கள் மற்றும் குடியிருப்புக் காணிகள் தற்போது தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம், உல்லாசப் பிரயாண அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பாதுகாப்புப் பிரிவு என்பவற்றால் பல்வேறு சந்தர்பங்களில் கையகப் படுத்தப்பட்டுள்ளன. இதனால் பல்லாயிரம் ஏக்கர் காணிகளை இப்பிரதேச பொதுமக்கள் சடுதியாக இழந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த பல அரசாங்கங்களின் காலத்தில் இவற்றிற்கு எவ்வித தீர்வுகள் வழங்கப்படவில்லை. எனவே புதிய அரசாங்கம் தமக்கு நீதியான தீர்வை தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பொதுமக்கள் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றினர்.

இக்கலந்துரையாடலில் சிங்கள, தமிழ், முஸ்லிம் பொதுமக்கள் கலந்து கொண்டு தம்மிடம் உள்ள காணி ஆவணங்களையும் சமர்ப்பித்து பிரதி அமைச்சருடன் பேசினர்.

இதனை அடுத்து தீர்க்கப்படாத காணி விடயங்களை சம்பந்தப்பட்ட சகல துறையினரது ஒத்துழைப்புடன் தீர்க்க தாம் விரைவில் நடவடிக்கைகள் எடுக்க உள்ளார் எனப் பிரதி அமைச்சர் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் –

இறக்கக்கண்டி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இல்மனைட் அகழ்வு தொடர்பில் மீண்டும் சுற்றாட லுக்கு அகழ்வினால் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றி ஆராயும் ஆய்வறிக்கை கோரப்பட்டு அதன் அடிப்படையிலேயே அகழ்வு மேற்கோள்வதா, இல்லையா என தொடர்புடைய மத்திய அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுடன் ஆலோசித்து தீர்மானிக்கப்படும்.

எதிர்காலத்தில் குச்சவெளி பிரதேச செயலகப்பிரிவு தொடர்பில் மேற்கொள்ள உள்ள அனைத்து அபிவிருத்தி முயற்சிகளையும் வெளிப்படையாகவும், பொறுப்புகூறத்தக்க வகையிலும், நிலைபேறு தன்மையுடனும் மேற்கோள் வோம். இச்செயற்பாடுகளைப் பொதுமக்களின் அபிலாசைகளுக்கு முக்கியத்துவம் அளித்தும், அங்கு காணப்படும் தொல்லியல் பண்புகள் மற்றும் சுற்றாடல் நிலைமைகள் பாதுகாக்கப்பட தக்க வகையிலும், பிரதேச மக்களின் சமத்துவமான அபிலாசைகள் கருத்தில் கொள் ளப்பட்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

இக்கலந்துரையாடலில் பிரதி அமைச்சருடன் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் குச்சவெளி பிரதேச செயலாளர் ஆகியோரும் உடன் பங்குபற்றினர்.





# கருணாநிதி விரும்பிய திட்டத்தை ஸ்டாலின் எதிர்ப்பது விசித்திரம்

## சென்னையில் பவன் கல்யாண் கருத்து

“கருணாநிதி விரும்பிய திட்டத்தை ஸ்டாலின் எதிர்ப்பது இப்போது விசித்திரமாக இருக்கிறது. நான் தமிழகத்தை விட்டு வெளியேறிவிட்டேன். ஆனால், தமிழகம் என்னை ஒருபோதும் விட்டுவிடாது.”

– இவ்வாறு ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் கூறியுள்ளார்.

சென்னை திருவான்மியூரில் ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ தொடர்பாக பா.ஜ.க. நேற்று நடத்திய கருத்தரங்கில் உரையாற்றிய ஆந்திரப் பிரதேச துணை முதல்வர் பவன் கல்யாண்,

“நான் தமிழகத்தில்தான் வளர்ந்தேன். நான் தமிழ்நாட்டை விட்டு வெளியேறியிருக்கலாம், ஆனால் தமிழகம் என்னை ஒருபோதும் விட்டுவிடவில்லை. தமிழகம் என் மீது ஏற்படுத்திய தாக்கம் மிக ஆழமானது. தமிழ்நாடு திருவள்ளுவர், சித்தர்கள், முருகன், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், ஆயிரக்கணக்கான கோயில்களின் பூமி. இது எம்.ஜி.ஆர். வாழ்ந்த பூமி, ஜல்லிக்கட்டு பூமி. தமிழ்நாட்டின் அனுபவம் என்னை வழிநடத்தி வருகிறது.

இன்றைய கருத்தரங்கு ஒரே நாடு, ஒரு தேர்தல் பற்றியது. இந்த ஒரே நாடு, ஒரு தேர்தல் குறித்து பல பொய்யான மற்றும் போலி செய்திகள் பரப்பப்பட்டுள்ளன. தேர்தல் நேரத்தில், அவர்கள் வெற்றி பெற்றால், மின்னணு வாக்குப் பதிவு சூப்பர். ஆனால், அவர்கள் தோற்றால், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் தவறு என்று கூறுகிறார்கள்.



அவர்கள் இரட்டை வேடம் போடுகிறார்கள். ஒரே நாடு, ஒரே தேர்தலை விரும்பிய கருணாநிதி அதை வலியுறுத்தினார். இன்று, சோகமான விஷயம் என்னவென்றால், திமுகவினர் அதை எதிர்க்கிறார்கள். சுதந்திரம் பெற்ற கடினமான ஆரம்ப காலங்களில் 20 ஆண்டுகள் நமது நாடு ஒரே நேரத்தில் தான் தேர்தலை நடத்தியது. இன்று அதை எதிர்ப்பவர்கள், ‘நெஞ்சுக்கு நீதி’யில் ஒரே நாடு, ஒரு தேர்தலை ஆதரிப்பது குறித்து கருணாநிதி எழுதியதைப் படிக்க வேண்டும்.

ஒரே நாடு, ஒரு தேர்தலை ஆராய ஒரு குழுவை அமைக்குமாறு கருணாநிதி அப்போது மத்திய அரசை வலியுறுத்தினார். கருணாநிதி விரும்பிய திட்டத்தை ஸ்டாலின் எதிர்ப்பது இப்போது விசித்திரமாக இருக்கிறது.” என்று தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் அதிகரிக்கும் கொரோனா; பாதிக்கப்பட்டோர் 1,009 ஆக உயர்வு



இந்தியாவில் 1,009 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. மே 19 அன்று இந்த எண்ணிக்கை 257 ஆக இருந்தது. கேரளா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் கொரோனா பாதிப்பு அதிகமாக உள்ளது.

சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ள தகவல்களின்படி, கொவிட் 19 மாறுபாடுகளான என்.பி.1.8.1 மற்றும் எல்.எப்.7 ஆகியவை சமீபத்தில் இந்தியாவில் கண்டறியப்பட்டன. ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாட்டில் என்.பி.1.8.1 மாறுபாட்டால் ஒருவர் பாதிக்கப்பட்டார். அதே நேரத்தில் மே மாதத்தில் எல்.எப்.7 மாறுபாட்டால் நான்கு பேர் பாதிக்கப்பட்டனர்.

உலக சுகாதார அமைப்பு எல்.எப்.7 மற்றும் என்.பி.1.8.1 துணை மாறுபாடுகளை கண்காணிப்பின் கீழ் உள்ள மாறுபாடுகள் என வகைப்படுத்தியுள்ளது. இவை கவலைக்குரிய மாறுபாடுகள் அல்லது கவனத்துக்குரிய மாறுபாடுகள் அல்ல என தெரிவித்துள்ளன. சீனா மற்றும் ஆசியாவின் பிற பகுதிகளில் கொவிட் 19 பாதிப்பு சமீபத்தில் அதிகரிப்பதற்கு இந்த மாறுபாடுகள் தான் காரணம் என்று கூறப்படுகிறது.

கடந்த வார இறுதியில் சுகாதார அமைச்சகம் கொரோனா பாதிப்புகளை மதிப்பாய்வு செய்து, முக்கியமாக கேரளா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருந்து பாதிப்பு அதிகம் பதிவாகியுள்ளதாகக் கூறியது.

தற்போது இந்தியா முழுவதும் 1,009 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதில் 430 பேர் கேரளாவைச் சேர்ந்தவர்கள். கேரளாவில் மே 19 முதல் 335 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மகாராஷ்டிராவில் தற்போது 209 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 153 பேர் கடந்த வாரம் முதல் பாதிக்கப்பட்டுள்ளனர். மகாராஷ்டிராவில் கடந்த வாரத்தில் நான்கு பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்தனர். டெல்லியில் தற்போது பாதிப்பு 104 ஆக உயர்ந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக, கடந்த வாரத்தில் 752 பேர் புதிதாக கொரோனா பாதிப்புக்குள்ளாகியுள்ளனர், ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். அதே நேரத்தில் 305 பேர் குணமடைந்துள்ளனர்.

# உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கண்டனம்

உக்ரைன் மீதான ரஷ்யாவின் புதிய தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இந்த தாக்குதலுக்கு தாம் வருந்துவதாகவும் ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் செயல்கள் தமக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை எனவும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

உக்ரைன் மீது கடந்த 02 நாள்களில் மாத்திரம் ரஷ்யா 367 ட்ரோன் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

2022 ஆம் ஆண்டு மோதல் ஆரம்பமாகியதிலிருந்து ரஷ்யா ஒரே தடவையில் முன்னெடுத்த பாரிய ட்ரோன் தாக்குதலாக இது காணப்படுகின்றது.



# மீண்டும் காசா மீது இஸ்ரேல் படை நடத்திய தாக்குதலில் 20 பேர் பலி

காசாவில், இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் பாடசாலையொன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் சுமார் 20 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட பலர் காயமடைந்துள்ளனர் என அந்த நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் தமது இராணுவ நடவடிக்கைகளை முடக்கிவிட்ட நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.











இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

33

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?




2023 இல் கொழும்பில் அரச எதிர்ப்புப் போராட்டம் ஒன்றில் அநுரகுமார.

விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்கு திரும்பவில்லை, ஆனால் ஜே.வி.பி. ஜனநாயக வழிக்குத் திரும்பி அதிகாரத்தையும் பெற்றுக் கொண்டிருப்பது வாஸ்தவம்தான்.

1987இல் ஒப்பந்த காலத்திலும், பின் நோர்வேயின் அனுசரணையில் நடந்த சமாதானப் பேச்சுவார்த்தை நேரங்களிலும், விடுதலைப் புலிகளுக்கு ஆயுதப் போராட்டத்தை தள்ளி வைத்து, ஜனநாயகப் பாதைக்குத் திரும்ப சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனாலும் அது தெரிவு செய்யப்படவில்லை.

ஜே.வி.பியின் தலைவர்கள் விஜயவீர, உபதிஸ்ஸ கமநாயக்க போன்றோர் கொல்லப்பட்ட பின், கட்சியை பாரமெடுத்த தலைவர்களும், அங்கத்தினர்களும் மறைவிடங்களில் இருந்து வன்முறைகளைத் தொடரவே தீர்மானித்தனர். அவர்களுக்கு வேறு வழிகளும் இருக்கவில்லை. ஏனெனில் வெளிவந்து சரணடைந்தால் நடக்கக்கூடியவற்றையும் அவர்கள் தெரிந்திருந்தார்கள். அவர்கள் இருந்த நிலையில் அவர்கள் வன்முறையைக் கைவிடவில்லை, அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாதவர்களானார்கள். மத்திய குழு உறுப்பினர் சோமவன்ஸ அமரசிங்கவும் வெளிநாடு சென்றமையால், எஞ்சியோர் சில வன்முறைகளில் ஈடுபட்டு, மக்கள் ஆதரவற்ற நிலையில், அவர்களது இயக்கம் மக்களால் வெறுக்கப்பட்ட, மறக்கப்பட்டதாகவே இருந்தது.

ஒரு சமுதாயமே தன் மேல் சுமத்திய வன்முறையாக இது பார்க்கப்பட்டது.

பின்னர் சந்திரிகாவின் ஆதரவில் நிலைபெற்று, தங்களது அடிப்படைக் கொள்கைகளைக் கைவிடாது, வன்முறையான இராணுவத் தீர்வே இனப் பிரச்சினைக்குத் முடிவு என அதற்குத் தூண்டுகோலாக நின்று நடத்தியவர்கள். இராணுவத் தீர்வாக விடுதலைப் புலிகள் நிர்மூலமாக்கப்பட்டதன் பின் அதிகாரத்துக்கு எப்படி வருவது என்ற குறிகளில்

தொடர்ச்சி▼



அறகலய போராட்டம்

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

தாங்கள் நடத்திய வன்முறைக்காக மக்களை அணுக வேண்டியிருந்தது. பின் 2015 இல் தங்களது முன்னைய வன்முறைகளுக்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்டு, தேசிய மக்கள் சக்தியின் முகமூடியுடன் அதிகாரத்தையே கைப்பற்ற ஜனநாயக ரீதிக்குத் திரும்பியவர்கள்.

அறகலய போராட்டத்தின் கடைசி நாள்களில் வன்முறைகளுக்கு யார் பொறுப்பு என்பதைத் தள்ளி வைத்துப் பார்த்தால் இன்றைய அதிகாரத்தில் கட்சிக்கு வன்முறையில் இறங்க வேண்டிய தேவை வராது. ஏனெனில் இராணுவ அதிகாரம் இப்போது அவர்களது கட்டுப்பாட்டில் இருக்கிறது. வன்முறையை ஒறுத்து ஜனநாயக வழிக்கு அவர்கள் திரும்பி விட்டார்கள் என்பதில் அவநம்பிக்கை கொள்ள வேண்டியதில்லை. ஆனால் புலிகள் தங்களது வரிகளையும், சிறுத்தைகள் தங்கள் மச்சங்களையும் விலக்கி மறுவடிவம் எடுக்குமா என்பதற்கு அவர்கள் 1989 இல் ஆணித்தரமாக நின்ற கொள்கைப் பிடிப்பைப் பார்க்க வேண்டும். விடுதலை புலிகளின் அமைப்புகள் புலம்பெயரில் நடத்தும் பிரசாரங்களையும் கவனிக்க வேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாஸா செப்டெம்பர் 1989இல் சர்வ கட்சி மாநாடு ஒன்றை போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் இணைத்து நடத்தினார். அந்த மாநாட்டுக்கு ஜே.வி.பிக்கும் அழைப்புத் தரப்பட்டது அதற்கு மறுமொழியாக, அவர்கள் இப்படியான சர்வ கட்சிக் கூட்டம் இந்திய ஏகாதிபத்தியத்துக்குத்தான் உதவி செய்யும், அங்கு வரக்கூடிய கட்சிகளில் எஸ்.டி. பண்டாரநாயக்காவின் சிறிலங்கா முன்னேற்ற முன்னணி ஒன்றுதான் இந்தியாவுக்கு எதிரான தரப்பு என அறிவித்தனர். அந்த சர்வ கட்சிக் கூட்டம் சர்வ தேசத்திற்கு நாட்டின் நிலைமை சீராகிறது, வழமைக்குத் திரும்புகிறது என்ற படம் காட்டவே நடக்கிறது எனவும், நாட்டின் படித்த வாலிபர்கள் போராடுவது பிரேமதாஸவிடமிருந்து அதிகாரத்தைப் பறித்தெடுத்து சிறிமாவிடம் கொடுப்பதற்கு அல்ல, இந்திய ஒப்பந்தத்தை நிராகரியுங்கள், நாட்டை வடக்கு - கிழக்கின் எதேச்சாதிகாரத்திலிருந்து விடுவியுங்கள், இந்திய இராணுவத்தை விரட்டுங்கள், வெளிநாட்டு மூக்கு நுழைப்பு இல்லாமல் நாட்டின் பிரச்சினையைத் தீருங்கள், சட்ட ரீதியாக இயங்காத எல்லா எதேச்சாதிகாரக் குழுக்களையும் உடன் நிறுத்துங்கள் என்பவையே அவர்களின் கருத்தாக இருந்தன.

இன்றைக்கு நாடி பிடித்து அரசியல் செய்து, இந்தியாவுடன்பாதுகாப்புஒப்பந்தம்கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி▼



அறகலய போராட்டம்

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

முக்கியமாக இந்தியா இனப் பிரச்சினையில் தங்களது கொள்கைகளுக்கு எதிராக இயங்காது, அதனை உள்நாட்டுப் பிரச்சினையாக நாட்டு மக்களின் தீர்வுக்கு விட்டு விட வேண்டும் என்பதுதான் ஆட்சியாளர்களின் கருத்து. அதன் உத்தி என்னவோ இனப் பிரச்சினையை சர்வதேச பரப்பிலிருந்து இந்தியாவின் அனுசரணை யுடன் பலவீனமாக்குவதுதான். இந்த இனப் பிரச்சி னையில் இந்தியாவைக் கட்டி வைத்தால் சரி. அல்லது அவர்கள் மசிய மறுத்தால் பொருளாதார ரீதியில் சீனாவுடன் உதவியும் நட்பும் பாராட்டும் இலங்கை என்பதுதான் நிலைமை.

இந்த நாடி பிடித்து நடக்கும் அரசியலை தமிழ் மக்கள் கவனிக்க வேண்டும். தமிழகம் தங்களது தொப்புள் கொடி உறவு, தமிழகம்தான் இந்தியா என்ற எண்ணங்களில் அவர்களை நோக்கி ஓலம் வைக்காது, யதார்த்தத்தைப் புரிதல் வேண்டும். ஏனெனில் ஜே.வி.பியை மடியில் கொண்ட தேசிய மக்கள் சக்தி என்ற சிறுத்தை, இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்பதில் தனது மச்சங்களை களையும் சாத்தி யங்கள் கிடையாது.

1977-இல் அனுசரணையாக இயங்கிய சர்வதேச தமிழ் புத்திஜீவிகள், இனப் பிரச்சினையை எப்படி சர்வதேசப்படுத்துவது, அதில் இந்தியாவின் பெரும் பங்கு என்ற வழிகளில் பணியாற்றினார்கள். அவை தான் பின்னர் 1987-ல் ஒப்பந்தத்திற்கு வழி வகுத்தது.

தேசிய மக்கள் சக்தி இனவாதத்தை களைய வேண்டும், அதைத் தலை தூக்க விடக்கூடாது என்ற கொள்கை பிடிப்பில் உள்ளவர்கள், இதில் முன்னைய அரசாங்கங்களில் இருந்து மாறுபட்டவர்கள், ஆகவே அவர்களுடன் பேச்சு வார்த்தைகளால் பேசி எங்க ளிடையே இவற்றைத் தீர்க்க வேண்டும், அதனையே ஊக்கப்படுத்த வேண்டும், முரண்படும் அரசியலால் எங்கள் சமுதாயம் மீண்டும் அழிவு நிலைக்கு போகும் என்ற வாதமும் வைக்கப்பட்டது.

எந்தப் போரின் இடையிலும் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன. ரஷ்யா - உக்ரைன் ஆகட்டும், பாலஸ்தீ னத்தின் காஸா ஆகட்டும், பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனால் இந்த பேச்சுவார்த்தைகள் எந்த அடிப்படையில் இருக்க வேண்டும் என்ற கேள்விகளும் வைக்கப் படுகின்றன. அதனை ஒட்டித்தான் இங்கும் இரு பகுதியினரும் தெளிவாக தங்கள் நிலைப்பாட்டை வகுத்துக் கொள்ளுதல் வேண்டும். தெளிவான திட் டங்கள் இல்லாத பேச்சு வார்த்தைகள் பிரயோசனமற்ற கூடிக்கலைந்தவையாக மாறும்.

மேற்குறித்தபடி ஜே.வி.பி. இந்திய ஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை. அன்று, அது இந்திய ஏகாதிபத்தியம் என்று வன்முறைகளை மேற்கொண்டனர். இன்று, இந்தியாவுடன் பாதுகாப்பு ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் ஒப்பந்தங்கள் உண்டு. அப்படியானால், இப்படியான சீராகிய உறவில், தேசிய மக்கள் சக்தி இந்திய ஒப்பந்தத்தின் மற்றைய சரத்துக்களான நாட்டின் பன்முகத்தன்மை, பாரம்பரிய பிரதேசங்கள், மாகாண சபைகள், அதனூடான அதிகார பரவல் போன்றவற்றை ஏற்றுக் கொள்கிறதா? தேசிய மக்கள் சக்தியின் ஜே.வி.பி. அங்கத்தினர்கள் ரில்வின் சில்வா, விஜித்த ஹேரத் போன்றவர்களின் கூற்றுக்கள் அதைக் குறிக்கவில்லை. ஆனால் ஜனாதிபதி 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவோம் என்கி றார். ஆனால் காத்திரமான நடவடிக்கைகளைக் காண முடியவில்லை. அப்படியானால் அவர்களது நிலைப்பாட்டில் 'ஒரு நாடு - ஒரு தேசம் - ஒரு அதிகாரம்' என்பதில்தான் பேச்சுவார்த்தைகளா?

இப்பொழுது உள்ளூராட்சி சபை தேர்தல்களில் சரிந்திருக்கும் வாக்கு விதங்களின் நிலைமையில் மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்தும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமா என்பது கேள்விக்குறியாகி உள்ளன. ஆனால் அரசுப் பதவியை ஏற்றும் திசைகாட்டியின் நடைமுறைப் போக்கு 'ஒரு நாடு - ஒரு மக்கள் - ஒரு தேசம் - ஓர் அதிகாரம்' என்ற அவர்களது 1989 ஆம் ஆண்டுக்கு முன்னரான கொள்கைகளிலேயே நடை போடுகின்றது.

போரின் முடிவின் விளைவுகள் இரண்டு பகுதியி னராலும் வெவ்வேறான மனோபாவங்களில், இரண்டு தேசங்களாகத்தான் கொண்டாடப்பட்டன. ஓர் இணைப் பின் முனைப்பு இருந்ததாகக் காண முடியவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்த கோரி தமிழ் தலைவர்கள் இந்தியாவுக்கு வேண்டுகோள் விடுக்கா மல், இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். இடையில் 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத் தக் கோரிக்கைகள் வைக்க வேண்டும். ஆனால் தமிழ் தலைவர்கள் அதைப் போர் முடிந்து இதுவரை அழுத்தி உரைப்பவர்களாகத் தெரியவில்லை. தமிழ்த் தேசிய கட்சிகள் எல்லாம் 13 ஆம் திருத்தத்தை ஏற்கவில்லை என்ற நிலைப்பாட்டில் இருப்பதால், தாங்கள் எப்படி அதை அமுல்படுத்துமாறு இலங்கை அரசை கேட்பது என்ற நிலை. ஆனாலும் இந்திய அரசின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் போது அதனை அமுல்படுத்த அழுத்தம் கூறி, ஆனால் தீர்வுக்கு அதற்கும் மேலே போக வேண்டும் எனக் கேட்பதால்

தொடர்ச்சி▼




அறகலய போராட்டம்

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

இந்தியாவும் நீங்கள் அவற்றை சிறிலங்கா அரசிடம் கேளுங்கள் எனப் பேசி அனுப்புகிறது.

இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு எனப் பேச்சுவார்த்தைகளுக்குக் காத்திராமல், தமிழ் பகுதிகள் யதார்த்த நிலையில் 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி, மாகாண ஆளுநரில் குவிந்திருக்கும் ஜனாதிபதியின் அதிகாரங்களை மாகாண சபைக்கு மாற்றும் வழியில் பேச்சுக்களை முன்னெடுத்து தொடர்ச்சியான ஈடுபாடுகளில் இருக்கலாம். ஆனால் மாகாண சபைத் தேர்தல் வருவதில் அவர்களுக்கே தற்பொழுது ஆர்வம் குறைந்து தென்படலாம். ஏனெனில் அதைக் கேட்டு வைத்து விட்டால், யார் மாகாண சபைத் தலைவராக இருப்பது என்ற போட்டிகளும், யார், யாரை வீழ்த்துவது போன்ற தந்திரோபாயங்களும் ஓடும் போது தமிழ் மக்களின் அபிலாசைகள் பின்தங்குவதை தவிர வேறு வழி இல்லை.

இந்த நாட்டை உண்மையாக விரும்பும் - நேசிக்கும் - அது வளர்வதைக் காண துடிக்கும் எவ்வளவோ பெரும்பான்மையான, மக்கள் நாடு அதிகாரப் பகிர்வு கொண்ட பன்முகத்தன்மையில் வீறு நடை போட வேண்டும் என விரும்புகிறார்கள். வேற்றுமைகளை அனுசரித்து, பன்மையை ஏற்று, அதனுடைய வளர்ச்சிக்கு அதிகாரங்களை பகிர்ந்து, ஒற்றுமையுடன் முன்னேற வேண்டும் என்று பெரும்பான்மையான மக்கள் விரும்புகிறார்கள்.

அப்படியானவர்களை இணைத்துத்தான் தேசிய மக்கள் சக்தி உருவானது. ஆனால் அதிகாரங்களில் நடைமுறையாக தமிழ் மக்கள் தங்களது தேசிய அபிலாசைகளைக் கைவிட்டு, ஒரு நாட்டின் ஒரு மக்கள் என்ற பரப்புரையில் ஜே.வி.பி. கொள்கையில் முதற்படியாக கரைந்து விடுவதா? அப்படிக் கரைந்து விட்டால் ஒரு நாட்டு மக்கள், சம உரிமைகள், யாவருக்கும் சந்தர்ப்பங்கள், வாழ்வாதார வளர்ச்சி என்பவற்றைப் பெற்று, சமுதாயத்தின் பற்றாக்குறைகளை சமன் செய்து, சமதர்மத்தில் வாழலாம் என்ற மாற்றுச் சிந்தனையை கைப் பிடிப்பதா?

தமிழ் மக்களிடையே மாற்றுச் சிந்தனை மலர வேண்டும், அதனை அதனிடையேயுள்ள தேசிய மக்கள் சக்தி மலர விடுவதில்லை, முரண்பாட்டு அரசியல் எதுவித நன்மையும் தரப்போவதில்லை, உணர்ச்சி அரசியலில் இருந்து விடுபட வேண்டும் என்ற கோஷங்களும் உண்டு. ஒரு விதத்தில் அவை நியாயமானவை. மேற்கூறியபடி ஒரு நாட்டின் - ஒரு தேசியத்தில் கரைந்து விடுவது அந்த மாற்றுச் சிந்தனையை முன்னெடுத்து எவ்வளவு சமதர்மத்தை ஒரு பகுதியின் மேலாதிக்கத்திலோ அல்லது பேராண்மையிலோ நிலை நிறுத்தும்?

(தொடரும்)

# சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை இரண்டாகப் பிரித்தால் நல்ல சேவை கிடைக்கும்

## சுகாதார வைத்திய அதிகாரி கோரிக்கை

(த.சுபேசன்)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை இரண்டாகப் பிரிப்பதன் ஊடாகவே வினைத்திறனான சுகாதார சேவையை பொதுமக்களுக்கு வழங்க முடியும் என சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ். சுதோகுமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊராட்சி முற்றக் கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை இரண்டாக பிரிக்கப்பட வேண்டும். அத்துடன் தற்போதைய பணிமனையும் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும்.

இதனூடாகவே தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணிகள், குழந்தைகள் மற்றும் இளவயதினருக்கான சுகாதார சேவைகளை சிறப்பாக முன்னெடுக்க முடியும். – எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன்போது கூட்டத்திற்கு தலைமை வகித்த அரசாங்க அதிபர் ம.பிரதீபன் பதிலளிக்கையில் –



சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை இரண்டாகப் பிரிப்பது உடனடிச் சாத்தியம் இல்லை.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக கோரிக்கையை முன்வைத்து தற்போது உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் கட்டடத்தை விரிவாக்க முடியும். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவர் வலியுறுத்தியிருந்தார்.

தென்மராட்சிப் பிரதேசமானது அறுபது கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய பரந்துபட்ட பிரதேசமாகவும், அதிக சனத்தொகையைக் கொண்ட பிரதேசமாகவும் காணப்படுகின்றமையால் சுகாதார சேவைகள்,பிரதேச செயலகம் உள்ளிட்ட திணைக்கள உத்தியோகத்தர்களால் மக்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

அத்துடன் பிரதேதத்திற்கான அபிவிருத்தி ஒதுக்கீடுகளும் போதுமானதாக இன்மையால் பிரதேச செயலகம் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை பிரதேசமக்களால் நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் கூட தென்மராட்சிப் பிரிப்பு விவகாரம் எதிரொலித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஏற்றுமதிக்குத் தயாராகின்றன பனை சார்ந்த கைப்பணிப் பொருள்கள்!

(த.சுபேசன்)

பனை சார்ந்த கைப்பணிப் பொருள்களுக்கு சர்வதேச சந்தையில் அதிக கிராக்கி ஏற்பட்டிருக்கும் நிலையில், இலங்கையினுடைய பனம் கைப்பணிப் பொருள்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான தயார்ப்படுத்தல்கள் மிக விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

பனை அபிவிருத்திச்சபை தற்போது அமெரிக்கச் சந்தையை குறிவைத்து தனது கைப்பணிப் பொருள்களைத் தயார் செய்து வருகிறது.

பனை அபிவிருத்திச்சபையின் முன்னாள் கைப்பணி விரிவாக்க முகாமையாளர் த.விஜயனின் ஏற்பாட்டில் அமெரிக்காவிற்கான கைப்பணிப் பொருள்கள் இதுவரை உற்பத்தி செய்யப்பட்டன. தற்போது அந்தப் பதவிக்கு புதிதாக பதில் கடமைக்கு நியமிக்கப்பட்ட து.சுகன்யா தொடர்ந்து அந்தக் கடமைகளை பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தி வருகிறார்.



புதிதாக நியமிக்கப்பட்ட விரிவாக்க முகாமையாளர் சுகன்யா பெண் தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தி பனை சார்ந்த உற்பத்தியானது சர்வதேச சந்தையில் கால்தடம் பதிக்க உறுதுணையாக விளங்குவார் என எதிர்பார்க்கின்றோம்.

பனம் கைப்பணிப் பொருள்கள் மிக விரைவில் உலக சந்தையில் தனக்கான தனியிடத்தைப் பிடிக்கவுள்ளன. அதன் பின்னர் பனம் கைப்பணித் தொழிலை பெண் தொழில் முனைவோருக்கான சிறந்த தொழிலாக மாற்றுவோம்.

ஏனைய கைப்பணிப்பொருள்களைப் போல் அல்லாது பனம் பொருள்களுக்கு தனியான கவர்ச்சி மற்றும் தனித்துவம் உள்ளது.

அந்தவிதத்தில் பனம் கைப்பணிப் பொருள்களை ஏற்றுமதி செய்து இலங்கைக்கு அந்நிய செலவாணியை ஈட்டிக்கொடுக்கும் புதிய மார்க்கமாக இது அமையும் என நம்புகிறோம். – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.





# மன்னாரில் இந்திய - இலங்கை அரசுகளின் உதவியுடன் அமைக்கப்பட்ட 24 வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஜிம் பிறவுண் நகர் கிராமத்தில் அமைக்கப்பட்ட 24 வீடுகள் நேற்றுத் திங்கட்கிழமை மாலை 4.45 மணி அளவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

இந்திய அரசினால் வழங்கப்பட்ட தலா 5 லட்சம் ரூபா நிதி உதவி மற்றும் இலங்கை அரசினால் வழங்கப்பட்ட ஒரு லட்சம் ரூபா நிதி உதவி மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக வழங்கப்பட்ட வீட்டுத் திட்ட கடன் உதவி ஆகியவை மூலம் ஜிம் பிறவுண் நகர் கிராமத்தில் அமைக்கப்பட்ட இந்த வீடுகளே வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் வீடுகளை வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பீ.சரத், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இதன் போது வன்னி நடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், பிரதேச செயலாளர் எம்.பிரதீப், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



















# ஆறுமுகன் தொண்டமானின் நினைவு நேற்று கொட்டகலையில் அனுஷ்டிப்பு

**(மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)**

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் கொட்டகலை சி.எல்.எவ். வளாகத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது!

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 5வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கொட்டகலை சி.எல்.எவ். வளாக ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளுடன் அன்னாரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இப்பூஜை வழிபாட்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பாரியார் ராஜலஷ்சுமி தொண்டமான், தவிசாளரும், நிதிச்செயலாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் மற்றும் இ.தொ.க.உயர்பீட உறுப்பினர்கள் எனப்பலர் கலந்துக் கொண்டனர்.





# இன்றைய ராசி பலன்கள் - 27.05.2025


மேஷம்

இன்று அதிர்ஷ்டமான நாள். கடின மான பணிகளையும் இன்று எளிதாக முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று திட்டமிட்டபடி பணிகளை செய்து முடிப்பீர்கள். உங்களின் திறமை காரணமாக நீங்கள் உங்கள் உங்கள் சக பணியாளர்களை காட்டி லும் முந்தி இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் இது சாத்தியம்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிபீர்கள்.


ரிஷபம்

இன்று நீங்கள் சுய வளர்ச்சிக்கான செயல்களில் ஈடுபட ஏற்ற நாள். என் றாலும் இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. நெருங்கிய நண்பர்கள் கூட நம்பிக்கை துரோகம் செய்வார்கள்.

பணிகள் சலிப்பை தருவதாக இருக்கும். இதனால் சோர்வு காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். இதனால் உறவில் இடையூறுகள் ஏற்படும். இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக பண நஷ்டம் ஏற்படலாம். கவனமாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள்.


மிதுனம்

இன்று ஆன்மீக விஷயங்களில் ஈடுபடுவதற்கு உகந்த நாள். இன்று பிரார்த்தனை மேற்கொள்வது மற்றும் இசை கேட்பது உங்களுக்கு ஆறுத லைத் தரும். இந்த நாட்டங்கள் தான் நீங்கள் விரும்பும் ஆறுதலை உங்க ளுக்கு பெற்றுத் தரும்.

பணியிடத்தில் கடுமையான பணிகள் காணப்படும். உங்கள் செயல்திறனை மேம்படுத்த நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் கடுமையாக வன்மையாக நடந்து கொள்வீர்கள். இத்தகைய போக்கு உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.தோல் எரிச்சல் காணப்படும். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்க வேண்டும்.


கடகம்

உங்கள் திறமையான தொடர்பு மூலம் நல்ல பலன்களைக் காண முடியும். ஆன்மீகத்தில் ஈடுபடுவது மற்றும் மந்திர உச்சாடனம் செய்வது ஆன்மீக சொற் பொழிவுகள் கேட்பதன் மூலம் சிறப்பாக உணரலாம்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப் படும். உங்களின் கடின உழைப்பு மூலம் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

குடும்பப் பிரச்சினை சம்பந்தமான உங்கள் கருத்துக் களை உங்கள் துணையுடன் மனம் திறந்து ஆலோ சிப்பீர்கள். உங்கள் அகந்தை போக்கை முறியடிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். உங்களிடம் உள்ள பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.


சிம்மம்

இன்று கடினமான சவால்கள் காணப் படும். நீங்கள் திறமையாக கையாள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்ப்பது நல்லது.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சமாளிக்க நேரும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் நேரலாம். உங்கள் பொறுமையை இழப்பீர்கள். இது உங்கள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற மருத்துவ செலவுகள் ஏற்படும்.

அதிக சிந்தனை காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது அமைதியாக இருப்பது சிறந்தது.


கன்னி

இன்று நீங்கள் கவலைக்கு ஆளா கலாம். இதனால் உங்கள் அடிப்படை பணிகளைக் கூட உங்களால் செய்ய இயலாது. சகஜமான அணுகுமுறை தேவை.

தன்னம்பிக்கையின்மை காரணமாக இன்று பணியில் மந்த நிலை காணப்படும்.உங்கள் பணிகளை திட்டமிட்டு அமைத்துக் கொள்வது சிறந்தது.

உங்கள் துணையுடன் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் நல்லுறவை பராமரிக்க இயலாது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். இன்று காணப்படும் பொறுப்புகள் எதிர்கொள்ள கடன் வாங்க நேரும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.


துலாம்

அனைத்து விஷயங்களிலும் பொறுமை தேவை. மனதில் குழப்பத் திற்கு ஆளாகாதீர்கள். எந்த செயலை யும் செய்வதற்கு முன்பு ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்கவும். சிறிது மந்தமாக காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளும் ஏமாற்றங்களும் காணப்படும். சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். உங்கள் செலவுப் பழக்கத்தை கட்டுபடுத்துவது நல்லது.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. முதுகு வலி ஏற்படும் வாய்ப்பு உள்ளது.


விருச்சிகம்

இன்று உங்கள் வளர்ச்சியில் முன்னேற்றம் கிடைக்கும் வகையிலான நற்பலன்கள் காணப்படும்.பிறருடன் சுமூகமாகப் பழகுவது நன்மை தரும். வாழ்வின் நன்மைகளையும் தீமைக ளையும் நீங்கள் உணர்வீர்கள்.

உங்கள் கடின உழைப்பு காரணமாக உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இது நல்ல புரிந்துணர்விற்கு வழி வகுக்கும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். சம்பாத் தியம் அதிகரிக்கும்.நீங்கள் கணிசமான தொகையை சேமிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.05.2025




இன்று செயல்பாடு மிக்க நாளாக இருக்காது. பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மகிழ்வைத் தரும். இன்று செயல்கள் சமூகமாக நடைபெறாது.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படாது. கவனக்குறைவு காரணமாக தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது. உங்கள் பணிகள் மேற்கொள்ளும் பொழுது நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு மற்றும் வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இதனால் பணம் இழந்து கவலைப்படுவீர்கள்.




இன்று செயல்பாடு மிக்க நாளாக இருக்காது. இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம். இன்று குறைந்த எதிர்பார்ப்புடன் காரியம் ஆற்றினால் அதற்குண்டான வெகுமதி கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையாக பணியாற்ற திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு கிடையாது. உங்கள் துணையுடன் உரையாடும்போது வார்த்தைகளில் கவனம் தேவை.

நிதிநிலைமை மோசமாக காணப்படும். கூடுதல் பணம் செலவு செய்வீர்கள்.




இன்றைய நாள் அவ்வளவு சிறப்பான பலன்கள் கிடைக்காது. தைரியம் குறைந்து காணப்படும். என்றாலும் நம்பிக்கையுடன் தைரியமான மன ஆற்றலுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணிகளை சுமக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடனான உறவு திருப்திகரமாக இருக்காது. நீங்கள் சம்பவங்களை கவனமாக கையாள வேண்டும்.

உறவில் திருப்தியற்ற உணர்வு காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

பண வளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் விட்டுக்கொடுத்து போகும் அணுகுமுறை காரணமாக நல்ல பலன்கள் கிடைக்கும். நல்ல உறவை பராமரித்து உங்கள் நண்பர்கள் மற்றும் அக்கம் பக்கத்தவரின் நல்லுறவைப் பெறுவீர்கள்.

பணியிடச் சூழல் இன்று உங்களுக்கு சாதகமாக இருக்கும். நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். சக பணியாளர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் சகஜமான மற்றும் நட்பான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். கணிசமான தொகை சம்பாதிக்கும் அதிர்ஷ்டம் காணப்படும்.





# அறுபதுக்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் வவுனியா மாநகரசபையினால் மடக்கப்பட்டன

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபை பகுதியில் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் கட்டாக்காலியாக திரிந்த அறுபதுக்கும் மேற்பட்ட மாடுகள் மாநகரசபையால் பிடிக்கப்பட்டுள்ளன.

கட்டாக்காலி மாடுகளால் இடம் பெறும் விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் இரவு வேளைகளில் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் கால்நடைகள் மாநகர சபையினரால் பிடிக்கப்படவுள்ளன எனொ பொது மக்களுக்கு தொடர்ச்சியாக ஒலிபெருக்கி மூலமாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

இவ்வறிவித்லுக்கு அமைவாக நேற்று முன்தினம் திகதி இரவு வேளைகளில் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக நின்றிருந்த மேற்பட்ட கால்நடைகள் மாநகர சபையினரால் பிடிக்கப்பட்டு நகர சபையின் பராமரிப்பில் உள்ளன.

இந்தக் கால்நடைகளை உரிமையாளர்கள் பத்து நாள்களுக்குள் தமது கால்நடைகளுக்குரிய அடையாளத்தினை உறுதிப்படுத்திய, அதற்குரிய தண்டப்பணத்தினைச் செலுத்தி தமது மீளப்பெற்றுக்கொள்ள முடியுமென மநகரசபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பத்து நாள்களினுள் உரிமை கோரப்படாத கால்நடைகளை பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய மாநகரசபையால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



